DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.**118/2025
Prosecution Witness P.W.24

Name: **திரு.**கைலாசம் கனகராஜன்
Caste:

Father's Name :**திரு.**
Calling :

Village:
Religion :

Taluk :
Age:

A2, 3 , 4 எதிரிகள் ஆஜர், A1 காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**நாள்: 27.07.2026**

(சாட்சி காணொளி காட்சி மூலம் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ரிலையன்ஸ் ஜியோ இன்போகார்ம் நிறுவனத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிக்கான நோடல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் பணியாற்றி வந்த திரு.கைலாசம் என்பவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 06.05.2025ம் தேதியன்று எங்கள் நிறுவனத்தை விட்டு சென்றுவிட்டார். இந்த வழக்கில் அவர் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன். அவரின் கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும்.

2. கடந்த 17.02.2025ம் தேதியன்று தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் இ–மெயிலிருந்து எங்கள் நிறுவன நோடல் இ–மெயில் ஐடிக்கு ஒரு இ–மெயில் வந்தது. அதில் உத்தமபாளையம் காவல் நிலைய குற்ற எண்.351/2024 சம்பந்தமாக ––––––, ––––––, –––––– மற்றும் –––––– ஆகிய நான்கு அலைபேசி எண்களுக்கு 16.11.2024ம் தேதி முதல் 17.11.2024ம் தேதி வரையிலான அழைப்பு விபரங்கள், வாடிக்கையாளரின்

விண்ணப்ப படிவங்கள் மற்றும் அதற்குரிய 63(4)(c) சான்றிதழ் இணைத்து வழங்குமாறு உத்தமபாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் இணைத்திருந்தது.

3. இந்த கோரிக்கையின் பேரில் மேலே குறிப்பிடப்பட்ட நான்கு கைபேசி அழைப்புகளின் விபரங்கள் குறுந்தகடு–ல் பதிவிறக்கம் செய்து, அவற்றுடன் வாடிக்கையாளரின் விண்ணப்ப படிவங்களை நகல் எடுத்து அதற்குரிய 63(4)(c) சான்றிதழ் மற்றும் 29.03.2025ம் தேதியிடப்பட்ட பதில் கடிதமும் இணைத்து உத்தமபாளையம் காவல் ஆய்வாளர், உத்தமபாளையம் என்பவருக்கு பதில் கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. 16.11.2024ம் தேதி முதல் 17.11.2024ம் தேதி வரையிலான கைபேசி எண்கள் ------, ------, ------, ------ என்ற எண்களுக்கான தொலைபேசி அழைப்பு விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் அ.த.சா.ஆ.30 (14 பக்கங்கள்), மேற்படி விபரம் அடங்கிய குறுந்தகடு அ.த.சா.ஆ.31 இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 63(4)(c) சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

<u>A1 to A3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. மேற்கண்ட தரவுகளை நான் சரிபார்த்து அனுப்பவில்லை என்றால் சரிதான். 6381552029 என்ற கைபேசி எண்ணானது நவீன், த/பெ.செல்வம், 55 F/1 கோம்பை ரோடு, கம்பம், உத்தமபாளையம் தாலுகா. மேற்கண்ட எண் எத்தனை ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறதென்றால் 18.12.2023–ம் தேதியன்று Activate செய்யப்பட்டுள்ளது. மேற்படி எண் சம்பந்தமான நபர் இந்த கைபேசி எண்ணை பயன்படுத்தி வந்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் எனக்கு அனுப்பிய இ–மெயிலில் அந்த எண்ணிற்கான கைபேசியையோ, சிம் கார்டினையோ ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

2. கடந்த 17.02.2025–ம் தேதியன்று இந்த அறிக்கை சம்மந்தமாக எனக்கு இ–மெயில் வந்ததென்றால் சரிதான். 78 நாட்களுக்கு பிறகு தான் எனக்கு அறிக்கை சம்மந்தமாக இமெயில் வந்ததென்றால் தேதி நினைவில்லை. அந்த

தரவுகள் அழியாமல் இருப்பதற்கான ஆவணங்கள் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. தரவுகள் எடுக்கப்பட்ட டவர் (Tower) பழுதடையவில்லை என்பதற்கான ஆவணமும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் ஏதும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

3. ஒரு டவர் சிக்னல் கோபுரமென்பது ஒரு புள்ளியில் அடங்காதென்றும், அது 5 – 10 கி.மீ.தூரம் இருக்குமென்றால் சரியல்ல, அது 500 மீ –1500 மீட்டர் வரை தான் இருக்கும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், கிராம பகுதியில் டவர் சிக்னல் 5 – 10 கி.மீ.தூரம் இருக்குமென்றால் சரியல்ல. ஒரு டவர் சிக்னல் ஒரு நிமிடத்திற்கு பல்லாயிரக்கணக்கான அலைபேசிகள் பேசப்படும் என்றால் சரிதான். கட்டிடங்கள், மரங்கள் அதிகமாக உள்ள பகுதியில் செல்போன் டவர் என்பது ஒரே சிக்னலை காட்டாமல் வெவ்வேறு சிக்னல்களை காட்டுமென்று சொன்னால் சரிதான். டவரில் வெவ்வேறு சிக்னல்களை காட்டும்போது யார் பேசினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாதென்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்த பல மாதங்களுக்கு பிறகு CDR கேட்டிருப்பது நம்பகத்தன்மையற்றது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக போலீசார் கேட்கும் செல்போன் எண்ணிற்கு தான் நாங்கள் அறிக்கை தாக்கல் செய்வோம் என்றால் சரிதான். டவரில் ஆயிரக்கணக்கான call கள் வரும்போது அந்த எண்ணிக்கு மட்டும் அறுதியிட்டு கூற முடியாது என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தின் போது இந்த எதிரி தான் இந்த செல்போன் எண்ணை பயன்படுத்தினார் என்று என்னால் கூற முடியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

------ என்ற செல் போன் எண்ணானது ஹிருத்திக் ரோஷன் என்பவருக்கு வழங்கப்பட்ட எண் கிடையாதென்று சொன்னால் சரிதான். அவர்கள் பேசிய உரையாடல்களை பதிவு செய்து அனுப்பும்படி போலிசார் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.27 17:03:08 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.